
## திராவிடத்தால் வாழ்கிறோம்

924

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

122

## “பெருமைக்குரிய தம்பி” பாவலர் இறையரசன்



ஓவியம் : ரவி பேலட்

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த பாவலர் இறையரசன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

1982-ஆம் ஆண்டு அக்டோபர் 6-ஆம் தேதி. திருச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் கலந்துகொண்ட நூல் வெளியீட்டு விழா. நூல் பெயர் ‘குறளும் பொருளும்’. 1330 திருக் குறளுக்கும், 2 அடி குறளுக்கு 4 அடிகளில் பாடல் வடிவத்தில் உரை எழுதி உருவாக்கப்பட்ட நூல். கலைஞர் பாராட்டுரை வழங்கிய அந்த நூலின் கூடுதல் சிறப்பு, நூல் ஆசிரியர் பாவலர் இறையரசன் கரூர் சின்னதாராபுரம் கிளைக் கழகத்தின் செயலாளர்.

“சில குறள்களுக்கு மட்டும் ‘குறளோவியம்’ எழுதிக் கொண்டிருக்கும் நான், 1330 குறள் களுக்கும் உரை எழுதுவேன். அப்படி எழுதும்போது, சில அறிஞர்களின் நூல்களை வாசிப்பேன். அந்த நூல்களின் பட்டியலில், இறையரசன் எழுதியிருக்கும் ‘குறளும் பொருளும்’ என்ற இந்த நூலும் இருக்கும். அந்த வகையில், என் தம்பி எனக்கு வழிகாட்டி என்பதில், எனக்குப் பெருமை” என்று முத்தமிழறிஞர் பாராட்டி வழங்கிய உரை அடுத்த நாளில், முரசொலியில் முழுப் பக்கம் வெளிவந்தது. கிளைக் கழகச் செயலாள ராக களப்பணியும், கலைஞரின் நெஞ்சம் கவர்ந்த இலக்கியப் பணியுமாக செயல்பட்ட உடன்பிறப்பு இறையரசன். இலக்கியப் பாவலர். கரூர் மாவட்டக் கழகத்தினருக்கு ‘பாவலர்’ என்றால் இன்னும் நெருக்கம்.

கரூர் மாவட்டம், க.பரமத்தி ஒன்றியம் சூ.தொட்டம்பட்டி என்னும் கிராமத்தில் 1943-ஆம் ஆண்டு நவம்பர் 20-ஆம் தேதி பிறந்தவர் இறையரசன். பெற்றோர் சிவன்மலை -பொன்னம்மாள். அன்றைய திண்ணைப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு வரை பயின்றவர். தனித்தமிழ் பற்று காரணமாக சாமிநாதன் என்கிற தனது இயற்பெயரை இறையரசன் என மாற்றிக் கொண்டார்.

இளவயதிலேயே தையல் கலைஞரான இறையரசன், திருக்குறள் நூலை வாசிக்கத் தொடங்கி, அதன்பால் ஈர்க்கப்பட்டு திருக்குறளை செம்மையுற உள்வாங்கியதுடன், தி.மு.கழகத்தின் இலட்சிய அரசியல் வாழ்க்கைக்கும் தன்னை ஒப்படைத்தார்.

### 15 வயதில் கழக மேடை

15 வயதிலேயே கழக மேடைகளில் ஏறத் தொடங்கினார் இறையரசன். 1957-ஆம் ஆண்டு, பொதுத்தேர்தலில் அரவக்குறிச்சி தொகுதியில் கழக ஆதரவுடன் போட்டியிட்டார் லப்பைக்குடி ஏ.கே.சமாலி. அவருக்கு தேர்தல் பணியாற்றியதில் தொடங்கியது, இறையரசன் அவர்களின் கழகப் பணி. அன்று முதல் 2022 தனது இறுதிக்காலம் வரை இடையறாது பணியாற்றியவர்.

சின்னதாராபுரத்தில் ஆடை விற்பனை நிறுவனம் நடத்திக்கொண்டே, கழகப் பணி களில் தீவிரமாக ஈடுபட்டவர். 1962-ஆம் ஆண்டு முதல் 1969-ஆம் ஆண்டு வரை சின்னதாராபுரம் கிளைக் கழகத்தின் துணைச் செயலாளராகவும், 1969-ஆம் ஆண்டு முதல் 1993-ஆம் ஆண்டு வரை 24 ஆண்டுகள் சின்ன தாராபுரம் கிளைக் கழகச் செயலாளராகவும் தன்னலம் பாராது இயங்கியவர்.

> “தான் ஒரு பாவலர் என்கிற கர்வம் இல்லாமல், கட்சிப் பணிகளிலும் ஆற்றலோடு இயங்கியவர் இறையரசன்”

வட்டக் கழகம் மாற்றப்பட்டு, ஒன்றியக் கழகமாக உருவாக்கப்பட்டபோது, கரூர் பரமத்தி ஒன்றியத்தின் துணைச் செயலாளராக மூன்று முறை பொறுப்பு வகித்தவர். 1993-ஆம் ஆண்டு க.பரமத்தி ஒன்றியப் பொறுப்பாளராக இறையரசனை நியமித்தார் கலைஞர். 1997-ஆம் ஆண்டு ஒன்றியக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று, 2000-வது ஆண்டுவரை சிறப்புடன் செயல்பட்டவர்.

1962-ஆம் ஆண்டு முதல் கழகத்தின் பொறுப்புகளில் நிர்வாகிகளை அரவணைத்துச் சென்ற இறையசரனை 2000-ஆம் ஆண்டு முதல் கரூர் மாவட்டத்தின் இலக்கிய அணிச் செயலாளராக அறிவித்தார் கலைஞர். தொடர்ந்து 15 ஆண்டுகள் அந்தப் பொறுப்பில் இருந்தார் இறையரசன்.

### தனி ஆளாக மறியல்

கழகத்தில் இணைந்து செயல்படத் தொடங்கியது முதல், தலைமைக் கழகம் அறிவித்த அத்தனை போராட்டங்களிலும் கலந்துகொண்டு, 9 முறை சிறைத் தண்டனை அனுபவித்தவர் இறையரசன். 1977-ஆம் ஆண்டு, நெருக்கடிநிலை காலத்துக்குப் பின்னர், இந்திராகாந்தி அவர்கள் தமிழ்நாடு வந்தபோது, கருப்புக்கொடி காட்டும் போராட்டத்தை, தமிழ்நாடு முழுவதும் நடத்தியது கழகம். அந்த ஆர்ப்பாட்டத்தின்போது கலைஞர் கைது செய்யப்பட்டார். அவரது கைதைக் கண்டித்து பரமத்தியில் தனி ஆளாக பேருந்து மறியல் செய்து சிறை சென்றவர். 2001-ஆம் ஜூன் 30-ஆம் தேதி நள்ளிரவில் கலைஞர் அவர்கள் அராஜகமான முறையில் கைது செய்யப்பட்டபோது, பரமத்தியில் கழக நிர்வாகிகளுடன் பேருந்து மறியல் செய்து சிறை சென்றார்.

தேர்தல் நேரங்களில் பாவலர் இறையரசன் பணியாற்றும் விதம், உடன் பயணிக்கும் கழகத்தினர் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்கின்றனர் கழகத்தினர். அசராமல் உழைக்கக் கூடியவர். கழகத்தினர் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் மதிப்பையும் நற்பெயரையும் பெற்றவர். கரூர் மாவட்டத்தில் அதிக நிதி வசூல் செய்ததற்காக, இரண்டு முறை கலைஞர் அவர்களால் ‘கணையாழி’ அணிவித்துப் பாராட்டப்பட்டவர்.

### பாவேந்தர் விருது

கழகக் களப்பணி போலவே, இலக்கியக் களத்திலும் திராவிட இயக்கக் கொள்கைகளைப் பேசும் ஆற்றல் கொண்ட இறையரசன் அவர்கள், ‘கொள்கை முரசம், சிந்தனை முழக்கம், செந்நீரில் மலரும் செந்தமிழ் ஈழம், இனமான ஏந்தல் காவியம்’ என குறிப்பிடத்தக்க படைப்புகளைத் தந்தும் கவனம் பெற்றவர். இவரது கழகப் பணிகளுக்கும், இலக்கியப் பணிகளுக்கும் புகழ் சேர்க்கும் வகையில், கழகத்தின் முப்பெரும் விழாவில் பாவேந்தர் பாரதிதாசன் விருதை 2001-ஆம் ஆண்டு வழங்கி, பெருமை செய்தார் தலைவர் கலைஞர். குறிப்பாக, பாவேந்தர் விருது தொடங்கப்பட்ட பின்னர், அந்த விருதினைப் பெற்ற இரண்டாமவர் என்பது, இறையரசன் அவர்களின் எழுத்துப் பணிக்கு கலைஞர் அளித்த கவனக்குவிப்பு.

இலக்கிய அணியில் அவரது இயக்கப் பொறுப்பு இருந்தாலும், கழக நிர்வாகிகளுடன் இணைந்து பணியாற்றுவதில் அவர் கொண்டிருந்த வேகம் 2018-ஆம் ஆண்டில் உடல்நலக் குறைவு காரணமாக குறைந்தது. தொடர்ந்து ஓய்வில் இருந்த இறையரசன் அவர்கள், 2022-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27-ஆம் தேதி தனது இயக்கத்தை நிறுத்திக்கொண்டார். மாவட்டக் கழகத்தினர் திரளாக நின்று, அவருக்கு இறுதி விடை அளித்தனர். “தான் ஒரு பாவலர் என்கிற கர்வம் இல்லாமல், கட்சிப் பணிகளிலும் ஆற்றலோடு இயங்கியவர் இறையரசன்” என முப்பெரும் விழாவில் கலைஞர் குறிப்பிட்டது, காலத்துக்கும் கழகத்தினர் மனதில் நிற்கும்.

...துடிக்கும்

## கருத்துரிமையை நசுக்கும் பா.ஜ.க.!

“சிறப்பு அந்தஸ்து உரிமையைப் பறித்த பின்பு, ஜம்மு காஷ்மீரில் அமைதியை நிலைநாட்டி விட்டோம், வேலைவாய்ப்புகளை உருவாக்கி விட்டோம், கட்டமைப்புகளைப் பலப்படுத்தி விட்டோம், ஒட்டுமொத்தத்தில் தீவிரவாதத்தை ஒழித்துவிட்டோம்” என்று பா.ஜ.க.வினர் கூறுகிறார்கள். ஆனால், காஷ்மீர் குறித்த 25 நூல்களைக் கண்டு அஞ்சி, அவற்றைத் தடை செய்திருக்கிறது, ஜம்மு காஷ்மீர் அரசு நிர்வாகம்.

பரவலாகப் பாராட்டப்பட்ட ஏ.ஜி.நூரானியின் ‘தி காஷ்மீர் டிஸ்ப்யூட்’, பிரிட்டிஷ் எழுத்தாளரும் வரலாற்றாசிரியருமான விக்டோரியா ஸ்கோஃபீல்டின் ‘காஷ்மீர் இன் கான்ஃப்ளிக்ட் – இந்தியா’, ‘பாகிஸ்தான் அண்ட் தி அன்எண்டிங் வார்’, புக்கர் பரிசு வென்ற அருந்ததி ராயின் ‘ஆசாதி’ மற்றும் லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் பேராசிரியர் சுமந்த்ரா போஸின் ‘கான்டஸ்டட் லேண்ட்ஸ்’ உள்ளிட்ட 25 புத்தகங்கள் காஷ்மீரில் தடை செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, 370-வது பிரிவு நீக்கம் குறித்து, விமர்சித்தும் வரலாற்று நோக்கிலும் எழுதப்பட்ட நூல்களும் தடை செய்யப்பட்டுள்ளன.

பென்குயின், ப்ளூம்ஸ்பரி, ஹார்பர்காலின்ஸ், பான் மேக்மில்லன் இந்தியா, ரூட்லெட்ஜ் மற்றும் வெர்சோ புக்ஸ் உள்ளிட்ட புகழ்பெற்ற பதிப்பகங்களால் வெளியிடப்பட்ட நூல்கள் இவை. ஆனால், இந்நூல்கள் பிரிவினைவாதத்தைத் தூண்டுவதாகவும், காஷ்மீர் பிரச்னை குறித்து, தவறான பார்வையை முன்வைப்பதாகவும், இளைஞர்களைத் தூண்டிவிடுவதாகவும் கூறி தடை செய்திருக்கிறார்கள்.

காஷ்மீர் குறித்து, இந்த நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளில் உடன்பாடில்லாதவர்கள், அதற்கெதிரான மாற்றுக் கருத்தை வெளிப்படுத்துவதுதான் ஜனநாயகமே தவிர, அரசு எந்திரத்தைப் பயன்படுத்தி, அந்த நூல்களை முடக்குவது முறையற்றது என்ற விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன. பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023-இல் பிரிவு 98-இ, புத்தகங்கள் அல்லது பிற ஆவணங்களைக் கைப்பற்ற அரசுக்கு அதிகாரமளிக்கிறது, அந்தப் பிரிவையே நீக்க வேண்டுமென்றும் கோரிக்கைகள் எழுந்திருக்கின்றன.

கருத்துரிமையை நசுக்கும் பாசிச பா.ஜ.க. அரசின், சர்வாதிகார மனநிலைக்கு இந்த சம்பவமும் உதாரணமாகியிருக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



### “நாங்குநேரி எப்படிய்யா இருக்கு?”



நீ.வானமாமலை

2017-ஆம் ஆண்டு, நான் நாங்குநேரி ஒன்றியக் கழகச் செயலாளராக இருந்தபோது, முரசொலி முகவர்களுக்கான சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பின்னர், தலைவர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்தபோது எடுத்த படம். அப்போது, “நாங்குநேரி தொகுதி எப்படிய்யா இருக்கு?” எனக் கேட்டு உரையாடினார். ஆண்டுக்கு இரண்டு முறையாவது தலைவரைச் சந்தித்து விடுவேன். அந்த ஓரிரு நிமிடங்கள்தான், வாழ்க்கையில் எல்லையில்லா மகிழ்ச்சிக்கான அளவுகோல்.

– நீ.வானமாமலை,
முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளர்,
நாங்குநேரி, திருநெல்வேலி கிழக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### 1964 - நகர்மன்றத் தலைவர்கள்!

1964-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சியைக் கழகம் கைப்பற்றியதுபோல, தமிழ்நாட்டில் பல நகராட்சிகளைக் கைப்பற்றியது கழகம். காஞ்சிபுரம், ஆரணி, பொள்ளாச்சி, சிதம்பரம், திருநெல்வேலி, வேலூர், திருப்பத்தூர், ஆம்பூர், மயிலாடுதுறை ஆகிய நகராட்சிகளில் கழக உறுப்பினர்கள் நகர்மன்றத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131